

# திருமணத் தடைக்கு பரிகாரம்

பொது வாக திருமணம் என்பது ஜாதகத்தின் அடிப் படையிலேயே விரை வாகவோ, தாமதமா கவோ அமைகிறது. பல ஜாதகங் களில் தோஷம் மிக முக்கிய மான பங்கு வகிக்கிறது.

தோஷங்கள் பலவாறாக இருந்தாலும் சில தோஷங்கள் கடுமையான பாதிப்பை ஏற்படுத்து கிறது. இதற்கு நிவாரணங்கள், பரிகாரங்களும் உள்ளது. இதை கடைபிடித்து 'முதிர் கன்னி' களின் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்துவோம்.

**செவ்வாய் தோஷமும், நிவர்த்தியும்:** ஒரு வரது ஜாதகத்தில் லக்னம், சந்திரன், சுக்கிரன் இடங்களில் இருந்து 2, 4, 7, 8, 12 ஆகிய இடங் களில் செவ்வாய் நின்றால் தோஷமாக கருத வேண்டும். ஆனால் அது நின்ற ராசி, அது யாருடன் சேர்ந்துள்ளது எவ்வளவு பார்வை என கணக்கிட்டு பின்னர் தோஷத்தின் பங்கை அளவிட வேண்டும். பொதுவாக பார்வையில் செவ்வாய் தோஷமா ஜாதகம் காணப்பட்டாலும் உண்மையிலே 10% ஜாத கங்களே பூர்ணமான தோஷம் உள்ளவை.

இந்நிலையில் ஆரம்ப கட்டத்திலேயே தோஷம் என கருதி ஜாதகத்தை பொருத்தம் இல்லை என தீர்மானிப்பது மிகவும் பாவம், தவறும் ஆகும்.

ஜாதகங்களில் ராசியைவிட அம்சம்தான் திருமணப் பொருத்தத்தில் மிக முக்கிய பங்கு வகிக் கிறது. எனவே அம்சத்தை நன்கு ஆராய்ந்து பின்னர் முடிவு எடுக்க வேண்டும். தோஷம் எந்தளவு உள்ளது என அறிந்து பரிகாரம், சாந்தி செய்தல் அவசியம். செவ்வாய் தோஷம் பலவிதமான வழியில் பரிகாரம் காணும் வகையில் அமைந்துள்ளது. சிலருக்கு தோஷ பரிகாரமாகயிருந்தும், திருமண தடங்கல் ஏற்பட்டால் மற்ற கிரகங்களின் நிலையை வைத்துத்தான் திருமணம் விரைவில் நடைபெறும்.

எனவே செவ்வாய் தோஷ நிவர்த்திக்கு உடையவர்கள் சரியான தான-தர்மம் செய்வது மூலம் திருமணத் தடையை நீக்கலாம்.

**மேஷ ராசி**யில் பிறந்தவர்கள் செவ்வாய் தோஷம், தோஷ நிவர்த்தியுடன் காணப்பட்டால் திருமணத் தடங்கல் ஏற்பட்ட சூழலில் சுப்ரமண்ய காயத்ரி மந்திரமான தத் புருஷாய வித்மஹே தேவ சேனதிபதி.

தீமஹி தந்நோ ஷண்முகப் பிரசோத யாத்'' மந்திரம் ஜெபிக்கலாம். அருணகிரி நாதர் பாடிய 'திருப்புகழ்' பாடலை மனமுருகி பாடலாம். முன்பின் தெரியாத ஏழைப் பெண்ணுக்கு சிவப்பு துணியை தானம் செய்யலாம்.

அனாதை இல்லம் சென்று துவரை பருப்பு 2 கிலோ தர்மம் செய்யலாம். செவ்வாய்க்கிழமை செல்வது நன்று. மேலும், செவ்வாய் இருக்கும் இராசி அதிபதிக்கு அர்ச்சனை செய்யலாம். மாலையில் சூரிய அஸ்தமன நமஸ்காரம் செய்து, 'செவ்வாய்' கிரகத்தை தரிசனம் செய்யலாம்.

**ரிஷப ராசி**யினர் செவ்வாய் தோஷம், தோஷ நிவர்த்தியுடன் இருப்பின், எதிர்வரும் செவ்வாய்க் கிழமை, வெள்ளிக்கிழமைகளில் சஷ்டி திதியும் கூடும் தினமான 12-07-2005, 5-9-2005 கந்தர் சஷ்டி விரதம் அனுசரித்து சஷ்டி கவசம் படித்தல் நன்று. மேலும் செவ்வாய் நின்ற இராசி அதிபதிக்கு மாலையில் அர்ச்சனை செய்யவும்.

சிவப்பு, வெள்ளை கலந்த புடவையை ஏழைப் பெண்மணிக்கு தானம் செய்தல் நன்று. வெள்ளிக் கிழமையில் முதியோர் இல்லம் சென்று தயிர் சாதத்தை தங்கள் கைகளால் தானம் செய்யவும்.

**மிதுன ராசி**யினர் செவ்வாய் தோஷம், தோஷ நிவர்த்தியுடன் இருப்பின் புதன்கிழமையில் பெருமாள் சன்னதியில் திவ்ய பிரபந்தம் பாடி பிரார்த்தனை செய்து பின்னர் முருகனுக்கு அர்ச்சனை



கே.பாலு சரவணசர்மா,
புரோகிதர்-ஜோதிடர், எண்: 9,
4-வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு,
சென்னை-600 045

செய்யவும்.

குதிரை வண்டி வைத்திருப்பவருக்கு பச்சை வர்ண துணி கொடுத்து, குதிரைக்குத் தேவையான உணவு வாங்கி தானம் செய்யவும். விஷ்ணு காயத்ரியை காலையில் ஜெபிக்கவும்.

**கடக ராசி**யினர் செவ்வாய் கிரக பரிகாரத்திற்கு தங்கள் கிழமையில் அம்மன் சன்னதியில் 'அபிராமி அந்தாதி' பாடி பின்னர் தமிழில் முருகனுக்கு அர்ச் சனை செய்து (பொருள் உணர்ந்து) வழிபடவும்.

பௌர்ணமி அன்று மிருக காட்சி சாலையில் உள்ள மயிலுக்குத் தேவையான உணவு தானம் செய்து மாலையில் இயலாத முதியோருக்கு அன்ன தானம் செய்யவும்.

**சிம்ம ராசி**யினர் செவ்வாயினால் ஏற்படும் திருமண தடங்கல் நீங்க பிரதோஷ வழிபாட்டில் கலந்து சிவனை வழிபட்டு 'தேவாரம்' பாடுதல் நன்று. காளை, பசுவிற்கு கோதுமை தவிடை தானமாக ஞாயிறு அன்று செய்தல் நன்று.

மேலும் சிறைப்பட்டுள்ளதுபோல் வாழும் மன நிலை பாதித்தவர்களுக்கு ஞாயிறு அன்று தங்கள் கைகளால் அன்னதானம் செய்யவும்.

செவ்வாய் தோறும் கந்தர் சஷ்டி படித்தல் அவசியம் நன்று.

**கன்னி ராசி**யினர் புதன்கிழமைதோறும் ராசி நாதன் விஷ்ணுவிற்கு துளசியால் அர்ச்சனை செய்து பின்னர் 'கந்தர லங்காரம்' படித்தல் நன்று.

ஏழை ஒருவருக்கு வாத்து (அன்னம் தானம் போன்றது) 2-ஐ தானம் செய்யவும். சிவப்பு துணியை செவ்வாயில் தானம் செய்யவும்.

**துலா ராசி**யினர் செவ்வாய் தோஷம், நிவர்த்தி அடையவும், திருமணத் தடை நீங்கவும், வெள்ளிக் கிழமைகளில் மாலையில் விளக்கு ஏற்றிய பின்னர் சஷ்டி கவசம் படித்தல் நன்று.

மிருகக்காட்சி சாலைக்குச் சென்று 'கருடன்' பறவைக்கு ஒரு வார உணவு (அல்லது அதற்கான பணம்) தானம் செய்யவும். அவசியம் ஏழை விதவைக்கு வெள்ளை, சிவப்பு கலந்த துணியினை வெள்ளிக்கிழமையில் தானம் செய்யவும்.

**விருச்சிக ராசி**யினர் செவ்வாய் தோஷத்தால் அதிக பாதிப்பு இல்லை என்றாலும் அவசியம் வழிபாடு செய்து செவ்வாயினால் ஏற்படும் திருமண தடங்கலை நீக்கலாம். ஒவ்வொரு செவ்வாய் அன்றும் காலை 6 மணி முதல் 7 மணி வரை சுப்ரமண்ய காயத்ரியை ஜெபித்து, கந்தர் சஷ்டி கவசம் படிக்கலாம். மலை மேல் உள்ள முருகனை செவ்வாய்க் கிழமைகளில் மாலையில் வழிபட்டு பூஜை செய்யலாம்.

மிருக காட்சி சாலை சென்று மயில், சேவல் ஆகியவைகளுக்கு பிடித்தவற்றை தானம் செய்தல் நன்று.

**தனுசு ராசி**யினர் வியாழக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமையில் முருகன், தட்சிணா மூர்த்தியை வழிபாடு செய்தல் நன்று. பெரியவர் களுக்கு வியாழன் அன்று பாத பூஜை செய்வித்தல் அவசியம்.

யானைக்கு ஒருநாள் உணவை தானம் செய்து, நல்ல புத்தகங்களை பொது நூலகத்திற்கு தானம் செய்து குரு கடாக்ஷம் பெற்று விரைவில் திருமண பாக்கியம் பெறவும்.

**மகர ராசி**யினர் செவ்வாய் உச்சம் பெற்றதால் தோஷம் நிவர்த்தி அடைந்தாலும், தோஷம் முழுமையாக நீங்க ராசி அதிபதி சனீஸ்வர பக வானின் அதி தேவதையான எமனை வழிபடுதல் அவசியம் நன்று.

சனிக்கிழமைகளில் எருமை மாட்டிற்கு தவிடு தானம் செய்து, வயதான ஏழை பெரியவருக்கு கருப்பு நிற துணியை தானம் செய்யவும்.

அமாவாசை அன்று தங்களின் முன்னோர் களுக்கு தர்ப்பணம் செய்து சிவப்பு துண்டை ஏழைக்கு தானம் செய்யவும். செவ்வாய்க்கிழமைகளில் முருகனை அர்ச்சனை செய்து வழிபடலாம்.




**கும்ப ராசி**யினர் திருவிழா, வெயில் காலங் களில் தண்ணீர், மோர், பந்தல் வைத்து தானம் செய் வது அதிக பலனை தரும். ஏழைகளுக்கு சமையல் பாத்திரம் வாங்கித் தந்து தானம் செய்யலாம். சனிக் கிழமையில் எருமைக்கு புல் தானம் செய்து மாலை யில் சிவனுக்கும், முருகனுக்கும் அர்ச்சனை செய்தல் நன்று.

**மீன ராசி**யின் அதிபதியான குருவின் பார்வைதான் குருபலன். எனவே ராசி அதிபதியின் ஆசி பெற ஏழை மாணவர்களுக்கு அகராதி, எழுது பொருள் ஆகியவற்றை வியாழக்கிழமையில், செவ்வாய் ஓரையில் தானம் செய்யவும்.